# மனித வள மேலாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 35

அறிவிப்புகள்

**2022–2023**

# மனித வள மேலாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண். 35

## அறிவிப்புகள்
## 2022 - 2023


**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்

## மனித வள மேலாண்மைத் துறை
## 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

### 1. அரசுப் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு ஒருங்கிணைந்த கைபேசி செயலி அறிமுகம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தகவல் தொழில் நுட்பத் துறையின் உதவியுடன், அரசுப் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக, மாநிலத்தின் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம், தமிழ்நாடு வன சீருடைப் பணிகள் தேர்வுக் குழுமம் ஆகியவற்றை ஒருங்கிணைந்த கைபேசி செயலி ஒன்றினை அறிமுகப்படுத்தும்.

இந்த செயலி மூலம், தெரிவு அறிவிக்கைகள், தேர்வுகளுக்கான பாடத் திட்டங்கள், எழுத்துத் தேர்வின் முடிவுகள் மற்றும் தெரிவுகளின் இறுதி முடிவுகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் எளிதாக அறிந்துகொள்ளலாம்.

மேலும் விண்ணப்பதாரர்கள், தேர்வுகள் குறித்த முக்கிய தகவல்கள், சான்றிதழ் சரிபார்த்தல், நேர்முகக் காணல் குறித்த விவரங்கள், கலந்தாய்வுகள், ஆளறிச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல் போன்றவற்றை இச்செயலி மூலம் மேற்கொள்ள இயலும்.

விண்ணப்பதாரர்கள், தெரிவு முகமைகளின் இணையதளம் தவிர, இந்த கைபேசி செயலி மூலமாகவும் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பதாரர்களின் பணம் மற்றும் கால விரயத்தை இச்செயலி தடுக்க உதவும்.

இத்திட்டத்திற்கு இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 2. ஆய்வுக் குழுக்களால் இணையவழியில் துறை அலுவலர்களுக்கு முன்னோடி, குறுகிய மற்றும் புத்தாக்கப் பயிற்சி.

துறைகளின் நலனுக்காக ஆய்வுக்குழுக்களால் ஆண்டுதோறும் நடத்தப்படும் முன்னோடி, குறுகிய மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளின் பாடத்திட்டங்களை இணையவழித் தொகுதிகளாகத் தயாரித்து துறை அலுவலர்கள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

பணமோசடி மற்றும் நிதிக் கையாடல்களை தவிர்ப்பது குறித்து, வங்கிப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியைப் போன்று, அரசு அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்படும். இணைய வழிப் பயிற்சிகளுக்குப்பின் சிறு தேர்வு நடத்தி சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகளை இணையவழி தொகுதிகளாகத் தயாரிப்பதற்கு பதினைந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய வளாகத்தை பசுமையாக்குதல்.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான, காலியாக உள்ள, 18 ஏக்கர் நிலத்திற்கு வேலி அமைத்து, சமூக காடு வளர்ப்புத் திட்டம் மூலம் மரக்கன்றுகள் நடப்பட்டு பசுமையாக்கப்படும்.

இதற்காக இருபத்தியேழு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. மாநில குடிமைப் பணி அலுவலர்களுக்கு இடைக்காலப் பயிற்சிகள்.

மாநில குடிமைப் பணி அலுவலர்களான துணை ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களின் பணியினை மெருகூட்ட, அவர்களின் பணி தொடர்பான முக்கிய பொருண்மைகளில் இடைக்காலப் பயிற்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

இதற்காக ஆண்டுதோறும் இருபது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்